# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:6 Issue :23 July 2024*

கோட்டை:6 வாயில்:23 ஜூலை 2024

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research



## ஆசிரியர் குழு

முனைவர் ஸ்டீபன்
முனைவர் ஒ முத்தையா
முனைவர் உமாதேவி
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
முனைவர் பொ. சுரேஷ்
முனைவர் ப.தனஞ்செயன்
கலாநிதி ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் *V.*வெங்கட்ராமன்
முனைவர் போ.கந்தசாமி
முனைவர் *P.*பாண்டிக்குமார்
முனைவர் ந. குமாரி
முனைவர் தயாநிதி
முனைவர் சந்திரசேகர்

## நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர் இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

## முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்



**+917299587879**

www.aranejournal.com
aranjournal@gmail.com



அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அகத்தினுள்


**ஐங்குறு நூற்றில் நீர் நிலைகள்**
பா. ரம்ஜான்

**சங்ககால தமிழரின் பகுத்துண்டு பல் உயிர் ஓம்புதல்”பண்பாடு**
முனைவர் ப. மணிகண்டன்

**கவிதைக்கும் மெய்ப்பாட்டிற்கும் உள்ள தொடர்பு**
செ. கயல்விழி

**அறநெறி இலக்கியத்தில் தமிழர் மருத்துவம்**
அ. குழந்தைசாமி

**சிலப்பதிகாரம் காட்டும் நீர் வழிப்பயணங்கள்**
சித்ரா.ரா

**திருக்குறளில் வாய்மையில் சமரசம்**
முனைவர் து. சிவசித்ரா

**தமிழில் சொல்லகராதிகள் உருவாக்கமும் பயன்பாடும்**
முனைவர் பூ. சேகர்

**ஏகன் அநேகன்**
அகல்யா தர்மலிங்கம்

**Bhakti Marga of Saint Thyagaraja**
R. Sudhalakxmi

**The Evolution of Tattvas in Samkjya Philosophy**
Varun Srivatsan

**வேள் பாரிநாவலில் மன்னனும் மக்களும்**
பொன். கனகா



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்

யாரைக் கேட்டது இதயம் புதினத்தில் சமூகப்பார்வை
அ. சையதுஅலி பாத்திமா

என்.ஸ்ரீராம் கதைகளில் விளிம்பு நிலைமக்கள்
சுதா .மு

மேலாண்மை பொன்னுசாமி படைப்புகள் போற்றும் மானுட பிரவாகம்
கோ. சத்யா

வண்டிப் பாதை நாவல்காட்டும் இயற்கை மருத்துவம்
சு. சத்தியப்பிரியா

பொன்னீலனின் மறுபக்கம் புதினத்தில் சிறு தெய்வங்களும் அதன் வழிபாட்டுமரபுகளும்
திருமதி சு.வினோதா

ஒப்பியல் நோக்கில் சைவ கிறிஸ்துவ குருத்துவம்
பூபாலசிங்கம். தனேஸ்

Representation of Culture in English Language Textbooks
U. Thulasivanthana

பழங்குடி மக்களின் சித்திரைத் திருவிழா சடங்கு முறைகள்
கா. இராஜமாணிக்கம்

பழங்குடி மக்களின் மாட்டுப் பொங்கல் விழா சடங்கு முறைகள்
கா. இராஜமாணிக்கம்

தமிழகக் கல்வெட்டுகளில் கோயில் நிவேதன உணவுகள் - ஓர் ஆய்வு
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

கல்வெட்டுகள் வாயிலாக அறியவரும் மருத்துவ செய்திகள்
அ. குழந்தைசாமி

அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி



# தமிழ்

# சங்ககாலதமிழரின் ''பகுத்துண்டுபல் உயிர் ஓம்புதல்''பண்பாடு

**முனைவர் ப.மணிகண்டன்**
மொழித்துறை உதவிப்;பேராசிரியர்
டாக்டர் எஸ் என் எஸ் ராஜலட்சுமி கலை அறிவியல் கல்லூரி கோவை

*Dr.P.MANIKANDAN,*
*Assistant Professor,Tamil Department,*
*Dr.SNS Rajalakshmi*
*College of Arts And Science Coimbatore-40.*

*DOI:https://doi.org/10.5281/zenodo.%2010544610*

***Abstract***

*Sangam literature was created with the life of the ancient Tamil people as the subject. These books have been created with the aim of making them useful for the future society by taking what is suitable for people's lives. In this way, this article aims to see how some vital values which are essential for human life are present in the literature.*

***Key Words:***

*Sangailakkiyam, Puranaanooru, Kalithogai, Kurunthogai*

**முன்னுரை**

தமிழருடைய நாகரீகம் பண்பாடு கலாச்சாரம் ஒருமைப்பாடு காதல் வீரம் போன்றவற்றைப் பண்டைய இலக்கியங்கள் தெளிவாக எடுத்தியம்புகின்றன. அவற்றை அறியாததாலோ அறிந்தும் அக்கறையின்மையாலோ நமது பண்பாட்டினைச் சிறிது சிறிதாக நாம் இழந்து வருகின்றோம். சங்க இலக்கியங்கள் பழந்தமிழரின் வாழ்வை சிறப்பாக எடுத்தியம்புகின்றன. வளர்ந்துவரும் மக்களின் பண்பிற்கு ஏற்ப தன்னையும் நிலைபெறச் செய்வதே நல்ல இலக்கியம் ஆகும்.

பண்பாடு

நிலத்தினைப் பண்படுத்தினால் நன்றாக விளையும். மனத்தைப் பண்படுத்தினால் நல்லவை விளையும். பண்பட்ட இடத்திலே விளைவதே பண்பாடு ஆகும்.

**"பண்புடையார்ப் பட்டுண்டுஉலகம் அதுஇன்றேல் மண்புக்கு மாய்வது மன்" (திருக்குறள்-999)**

பண்புடையவர்கள் இருப்பதால் தான் இவ்வுலகம் இன்றும் அழியாமல் உள்ளது என்கிறது குறள். இதைத்தான் புறநானூறும் கூறுகிறது. "உண்டால் அம்ம இவ்வுலகம்;" என்ற பாடலடி பிறர் பசித்திருக்கத் தான் உண்ணாமையைப் பண்பாடு என்று கூறுகின்றது. "பகுத்துண்டு பல் உயிர் ஓம்புதல்"என்கிறது திருக்குறள்."பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல் என்று பண்பாட்டிற்கு இலக்கணம் கூறுகின்றது கலித்தொகை. பகுத்து உண்பது ஒரு பண்பாடாகும். பண்பாடானது மக்களின் பழக்கவழக்கங்களோடு இணைந்தே பயணிக்கின்றன.

**திருமணமும் பண்பாடும்**

குறிஞ்சிநில மக்கள் வேங்கைமலரும் காலத்தில் திருமணம் செய்யும் மரபினைக்கொண்டிருந்தனர். வேங்கைமரத்தின் கீழிலிருந்து திருமண முடிவினைச் செய்வர். இதனை

***"வேங்கைவரிவிடம் நோக்கி" (கலி 38)***

***"மன்றல் வேங்கைக் கீழிலிருந்துமணநயந்தனன் (கலி39)***

பெண் கேட்டுத் தலைவன் வீட்டார் இனத்தோடு தலைவி வீட்டிற்கு வந்தனர். இதுதான் பண்டைய மரபு. திருமணஉறுதிப்பாட்டிற்குநாள் குறிக்க வந்தது பண்பாடாகும்.இத்தகைய மரபுவழிப் பண்பாடு இன்றும் தொடர்வது நோக்கத்தக்கது.

***"சான்றவர் இனமாகவெற்பனும் வந்தனன்" (கலி39)***

திருமணம் பேசி உடன்படும் போது நல்ல இடமும் நல்லநாளும் பார்ப்பது வழக்கமாகக் கொண்டிருந்தனர். திருமணத்தின் போது வீட்டை அழகுபடுத்துவர்.புதுமணல் பரப்பிச் செம்மண் பூசி அழகுப்படுத்துவர் திருமணம் பெரும்பாலும் பெண் வீட்டில் நடைபெற்றுள்ளது. இதனை

***"தருமணல் தாழப் பெய்து இல்பூவல் ஊட்டி***
***எருமைப் பெடையோடுஎமர் ஈங்குஅயரும் (கலி114)***

***"வரைப்பில் மணல் தாழப் பெய்துதிரைப்பில்***
***வதுயையும் ஈங்கேஅயர்ப்ப" (கலி115)***

திருமணத்திற்கு கற்றவல்ல அந்தனர்கள் வேள்வி நடத்தும் வழக்கம் இருந்தது. சங்க இலக்கியங்களில் திருமண நடைமுறை பற்றிய செய்திகள் சுட்டப்பெறுகிறது .மணமக்கள் மணத்தின் போது எரிவலம் வருதலை சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.

**"மாதர் கொள் மான் நோக்கின் மடந்தைதன் துணையாக ஓதுடைஅந்தணன் எரிவலம் செய்வான் போல்** ***" (கலி 69)***

**"எரிவலம் செய்வான் சாலிஒருமீன் தகையாளைக் கோவலன் மாமுதுபார்ப்பான் மறைவழிகாட்டித்**
***தீவலஞ் செய்துகாண்பார் கண் நோன் பெண்ணை" (சிலம்பு -1)***

இத்தகையபண்பாடும் இன்றும் தொடர்வதைஅறியலாம்.

**விருந்தோம்பல்**

பண்டைய இலக்கியங்கள் விருந்தோம்பலைத் தமிழகப் பண்பாடுகளுள் சிறந்த பண்பாடாகக் கூறுகின்றது. விருந்தை புறமாக வைத்துத் தான் மட்டும் உண்பதில்லை. இந்திரர் அமிழ்தமாக இருந்தாலும் அனைவருக்கும் பகிர்ந்து கொடுத்தே உண்டனர். விருந்தினரை வரவேற்றலும் வழியனுப்புதலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. இதனை வள்ளுவர்

**"செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பார் நல்விருந்து வானத் தவர்க்கு(திருக்குறள்** ***86;)*** என்று கூறுகின்றார்.

மனித நேயப் பண்பாடுகளில் தலையானதாகக் கருதப்படுவது பசி என வந்தவர்களுக்கு உணவளித்தலாகும். பசி வந்திட பத்தும் பறந்துபோகும் என்பர். இதனை அடிப்படையாகக் கொண்டு புறநானூற்றில் ***189ம்*** பாடல் உண்பது நாழி உடுப்பவை இரண்டே எனக் கூறுகின்றது.

**"தென்கடல் வளாகம் பொதுமை இன்றி**
**வெண்குடைநிழற்றியஒருமையோர்க்கும் - - -**

- - - - - - - - - -

**உண்பதுநாழிஉடுப்பவை இரண்டே பிறவும் எல்லாம் ஓர் ஒக்குமே" (புறம். 189:1-6)**
என்ற புறநானூற்றுப் பாடலடிகள் நம்மிடம் இருப்பதை மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்து அவர்களுக்கு இன்பம் அளித்தல் வேண்டும். மேலும்

**"நீர் இன்றிஅமையாயாக்கைக்குஎல்லாம்**
**உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" (புறம் 18இ18-19)**
என்றவரிகளால் பிறருக்கு உணவளித்த வரை உயிர் கொடுத்தோர் எனக் குடப்புலவியனார் கூறுகின்றார். சிறுகுடிகிழான் பாடிய புறப்பாடலில் உணவளிப்ப வரை பசிப்பிணிமருத்துவன் என எடுத்துரைக்கின்றார்.

**"யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய**
**பசிப்பிணிமருத்துவன் இல்லம்**
**அணித்தோ? சேய்த்தோ? கூறுமின் எமக்கே" (புறம் 173)**

உணவளிப்பவர்களுக்கு ஈடாக எப்பொருள் கொடுப்ப வரும் ஈடாக மாட்டார்கள் என்பது புலனாகின்றது.விருந்து போற்றுதல் தமிழர்களின் பண்பாகும் இவ்விருந்தோம்பல் பண்பு தமிழர்களிடம் மரபு வழியாக தொடர்ந்து நடைபெற்று வருகின்ற ஒன்றாகும். விருந்தோம்பலைக் கடமையாகக் கொண்டவர்கள் கடன் கொண்டும் தனது கடமையைச் செய்தனர். வறுமையுற்ற நிலையில் இருந்த போதும் இப்பண்பில் இருந்து மாறாமல் இருந்தனர்.

**பெருமவிருந்தொடுகைதூவாஎம்மையும் உள்ளாய்" (கலி81)**

**"இடும்பையால்**
**இம்மைஉரைத்தார்க்கு,அதுநிறைக்கல் ஆற்றாக்கால் தன் மெய்துறப்பான் மலை"**எவரென்று அறியாத நிலையிலும் நீர் வேட்கையென்று கேட்டவுடனேயே தாய் பொன்னாலான கலத்தில் நீர் கொடு என்று தன் மகளிடம் கூறுகின்றார். இதனை

**"உண்ணுநீர் வேட்டவன் எனவந்தாற்குஅன்னை அடர்பொன் சிரகத்தால் வாக்கிச்சுடர் இழாய்! உண்ணுநீர் ஊட்டிவாஎன்றால்"**தூதாக வந்த இளவேனிறுக்கும் விருந்தளித்தனர். இதனை

**"தூது வந்தன்றேகாதரர் தூதொடுவந்த**
**கனவினுக்குயாதுசெய்வேன் கொல் விருந்து" (கலி 32)**
ஊடல் தீர்க்கும் வாயில்களுள் விருந்தினர் வருகையும் ஒன்றாகும். கண்ணகி கோவலனிடம் நீ என்னைப் பிரிந்தமையால் விருந்தினரைப் பேணும் வாய்ப்பை இழந்தேன் என்றும் சீதையும் விருந்து கண்ட போது ராமன் என் செய்வான் என வருந்தினாள்.வள்ளவரும் விருந்தோம்பல் என்ற அதிகாரத்தை உருவாக்கினார்.அதனால் விருந்து இல்வாழ்வில் சிறப்பிடம் பெறுவதை அறியலாம்.

**"புள்ளும் மாவும் புலம்பொடுவதிய**
**நல்லெனவந்தநாரின் மாலைப்**
**பலர்புகுவாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ ? எனவும்" (குறுந்118:1-4)**
வழிப் போக்கரையும் அனாதைகளையும் ஆதரிக்கும் நோக்கில் வெளியே காத்திருக்கும் விருந்தினரைக் கேட்டு உபசரிக்கும் மரபு இருந்ததை அறிய முடிகின்றது.வாயிலாக இருக்கும் பாணனுக்கு சிறந்த விருந்து தரப்பட்டதை குறுந்தொகைப் பாடல் வழி அறியலாம்.தலைவன் தன்னை மணக்க இருக்கும் செய்தியை விரவில் உரைத்த பணிமகனுக்கு அருசுவை உணவு படைத்து விருந்தளித்தாள் என்பதை

**"நெய்கனிகுறும்பூழ் காயமாக ஆர்பதம் பெறுக!" (குறுந் 389)** என்றபாடல் வழி அறியலாம்

**வறுமையிலும் செம்மை**

சங்ககாலமக்கள் வறுமையிலும் செம்மையாக வாழ்ந்தனர். இதனை வெளிப்படுத்தும் பொருட்டு புறநானூற்றில் பெருஞ்சித்திரனார் வீட்டில் உணவு எதுவும் இல்லாமல் குப்பைக் கீரையை உப்பின்றி காய்ச்சித் தன் குழந்தைகளுக்கு அளிக்கும் தன் மனைவியைக் கண்ணுற்று தம் இயலாமையை எண்ணி நோகின்றார். தாயின் பால் இல்லாத மார்பை சுவைத்த குழந்தைகள் பசியால் தாயை பசியோடு நோக்குகின்றன. இதனைக் கண்ட புலவர் குமண வள்ளலைப்பாடி பெரும் பொருளுடன் வருகின்றார். வந்த அவர் மனித நேயத்தோடு மனைவியிடம் பெற்ற பொருளை தனக்கு மட்டுமல்லாமல் இல்லையென வந்தோர் அனைவருக்கும் கொடு என்கிறார். வறுமையிலும் எத்தகைய பரந்தமனது. இதனை

**"நின் நயந்துஉறைநர்க்கும் நீநயந்துஉறைநர்க்கும்**
**பல் மாண் கற்பின் நின் கிளைமுதலோர்க்கும்**
**கடும்பின் கடும்பசிதீரயாழநின்**
**நெடுங்குறியெதிர்ப்பைநல்கியோர்க்கும்,**
**இன்னோர்க்குஎன்னாது,என்னோடும் சூழாது வல்லாங்குவாழ்வதும் என்னாதுநீயும்**
**எல்லோர்க்கும் கொடுமதிமனைகிழவோயே" (புறம் 163இ1-7)**

என்ற பாடலடிகளில் தன்னைப் போல பிறரையும் நேசிக்கின்ற மனப்பாங்கு புலப்படுகின்றது.

**மனித நேயம்**

இன்றைய சூழலில் மனித நேயம் என்பது வெறும் பேச்சளவிலேயே உள்ளது. பண்டைய மக்களின் மனித நேயம் இன்றும் உலகிற்குச் சான்றாய் விளங்குகின்றது.போரிலும் மனித நேயத்தைச் சிந்தித்து நெறியோடு போரிட்டனர். பழந்தமிழர் செய்த போரே மனிதநேயப் போராக இருந்தது எனலாம். இதனை

**"ஆவும் ஆனியற் பார்ப்பனமக்களும்**
**பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்**
**தென்புலவாழ்நர்க் கருங்கடன் இறுக்கும்**
**பொன்போற் புதல்வர்ப் பெறாஅதீரும்**
**எம்மம்புகடிவிடுதும் நும்மரன் சேர்மின்" (புறம் 9-1-5)**

போர் தொடங்குவதற்கு முன்பு போர்ச் செய்தியை முரசறைந்து அறிவிப்பர். பசு பத்தினிப் பெண்டிர். பிணியுடையோர் மக்கட்பேறு அற்றோர் ஆகியோரைப் பாதுகாக்கும் நிலை காணப்பட்டது என்பதை நெட்டிமையார் பாடல் வழியே அறியலாம். மேலும்
பண்டைய மன்னர்கள் தம்மினும் வலிமை குறைந்தவர்களோடு போர் செய்வதில்லை தன்மேல் படை அனுப்பியவரை எம் அரசன் தமக்கு நிகராகாமையால் எதிரே சென்று படை அனுப்பமாட்டான் என ஆவூர் மூலங்கிழார் எடுத்துரைக்கின்றார்.

**"எறியாரெறிதல் யாவணதெறிந்தோர் எதிர்சென் றெறிதலுஞ் செல்லானதனால்"**
**(புறம் 301.8-9)**

என்ற பாடலடிகள் மூலம் தனக்கு நிகரான படைபலம் உடையவரையே எதிர்க்கும் பண்புடையவர்கள் என்பது புலப்படுகின்றது.

**பரிசில் வாழ்க்கை**

உணவுநாடி எறும்புகள் செல்வது போல பரிசினை நாடி புலவர்கள் மன்னர் இருப்பிடம் நாடிச் செல்வர். இதில் இன்னார் இனியார் என்ற வேறுபாடு புலவர்களிடம் இல்லை. புலவர்கள் பரிசில் வாழ்க்கை எத்தகையது என்பதை

**"வள்ளியோர்ப் படர்ந்துபுள்ளின் போகி**
**நெடியஎன்னாதுசுரம்பலகடந்து**
**வடியாநாவின் வல்லாங்குப் பாடிப்**
**பெற்றதுமகிழ்ந்துசுற்றம் அருந்தி**
**ஓம்பாதுஉண்டு கூம்பாதுவீசி**
**வரிசைக்குவருந்தும் இப்பரிசில் வாழ்க்கை**
**பிறர்க்குதீதறிஞ் தன்றோ இன்றேதிறம்பட**
**நன்னார் நாணஅண்ணாந் தேகி**
**ஆங்கினிது ஒழுகின் அல்லஓங்குபுகழ் மண் ஆள் செல்வம் எய்திய**
**நம் ஓர் அன்னசெம்மலும் உடைத்தே** (புறம்-47)

என்ற பாடலடிகளில் புலவர்களிடம் நாட்டிற்கு நல்லது செய்யும் நல்லியல்பு இருந்ததை அறியலாம். மேலும் புலவர்களுக்கே உரியஞானச் செருக்குடன் வறுமையிலும் செம்மை பொலிவுபெறும்படி வாழ்ந்தனர் என்பதை மேற்கண்ட பாடல் வழியே உணரலாம்.

பிசிராந்தையார் தமது வயது அதிகமாயினும் நரை தோன்றாமைக்குக் காரணம் என் மனைவி மாண்புமிக்கவள் மக்களும் அத்தன்மையரே ஏவல் செய்யும் இளையோரும் நல்லவரே என் நாட்டு வேந்தனும் அல்லவை செய்யாது அறம் காக்கும் செங்கோலன். எம் நாட்டு சான்றோர்களும் நன்மை நிரம்பித் தீமை விலகி ஒழுக்கத்தில் வாழும் கொள்கை உடையவர்கள் எனப் போற்றுவதின் மூலம் புலவர் எல்லோர் மீதும் கொண்ட மனித நேயம் புலப்படுகின்றது.

**யாண்டுபலஆகநரைஇலஆகுதல்**
**யாங்காகியர் எனவினவுதிர் ஆயின் மாண்டஎன் மனைவியோடுமக்களும் நிரம்பினர்**
**யான் கண்டனையர் என் இளையரும் வேந்தனும்**
**அல்லவைசெய்யான் காக்கும் அதன் தலை**
**ஆற்றவிந்துஅடங்கியகொள்கைச்**
**சான்றோர் பலர் யான் வாழும் ஊரே" (புறம்-191)**

மனிதன் உலகத்தோடு ஒட்ட வாழும் இயல்பினன். இது எக்காலத்திற்கும் பொருந்துவதாகும். இப்பண்பினை மனிதன் எப்போதும் வளர்ந்து வருவதுடன் உலகிற்குக் கொடையாகவும் வழங்கி வருகின்றான் என்பதை

**"முந்தையிருந்துநட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்"**

எனும் வரிகளால் உலகியலின் உலகளாவிய அறப்பண்பு அறியலாகிறது.

**ஈகை**

இல்லாதவற்கு வழங்குவது ஈகை ஆகும். கைமாறு கருதாமல் செய்வது ஈகையாகும். இதனை அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைச் சிறப்பினை

**"ஓவாதுஈயும் மாரிவண்கை**

**நெடுந்தேர் அஞ்சி"**என்று ஔவை பாராட்டுகிறார். எல்லா விதமக்களுக்கும் ஈகை புரியும் நெடுமான் அஞ்சியின் பரந்த மனமும் புலப்படுகிறது. மேலும்

**"இரவலர் வாராவைகல்**

**பலவா குக"** (137) இரவுலர்களுக்கு உதவுவது பெரும் அறமாக மக்கள் மதித்தனர் கொடைக்குணம் படைத்த பெருமக்களிடையில் கொடுத்தவற்றைத் திரும்பவும் பெறும் இழிந்த உள்ளம் கொண்டவரும் சிலர் இருந்தனர். இதனை .

**"இடுக்கண் அஞ்சி இரந்தோர் வேண்டி**
**கொடுத்தவைதாவெண் சொல்லினும்**
**இன்னாதோநம் இன்னுயிர் இழப்பே"** (குறுந் 349) செல்வம் ஏனையோருக்கும் பயன்படுவதை

**“நல்லிசைவேட்டநயனுடையநெஞ்சின் கடப்பாட் டாளன் உடைபொருள் போலத் தங்குதற் குரியதன்று” (குறுந் 143)** என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

**முடிவுரை:**

இலக்கியம் வாழ்விலிருந்து உருவானதும் வாழ்க்கைக்கானதும் ஆகும். எனவே இவ்விலக்கியத்தின் வழியே சமுதாய வரலாற்றை அறியமுடியும். சமுதாயம் ஏற்றுக் கொண்ட பழக்கவழக்கங்களும் நடைமுறை நெறிமுறைகளும் மக்கள் வாழ்விற்கு உகந்தவை என்ற நிலையில் முன்னோர் அறங்களாக சிலவற்றை வகுத்தனர் மனித நேயப் பண்பாடுகள் பிறருக்கு உதவுதல் பசியால் துன்புறுபவர்களுக்குத் துயர் துடைத்தல் பிறஉயிர்களுக்குத் துன்பம் விளைந்திடக்கூடாது எனும் நோக்கம் பிறமனிதர்களை மதித்தல் செல்வத்துப் பயனே ஈதல் என்ற நோக்கிலும் பல அறப்பண்பாட்டு விழுமியங்களைப் எடுத்தியம்புகின்றது.

**பார்வை நூல்கள்**

1.குறுந்தொகை மூலமும் உரையும் - நியூ சென்சூரி புக் ஹவுஸ் (பி) லிட் சிட்கோஇ சென்னை — 98

2.கலித்தொகை - மூலமும் உரையும் - நியூ சென்சூரி புக் ஹவுஸ் (பி) லிட் சிட்கோஇ சென்னை — 98

3.புறநானூறு - மூலமும் உரையும் - நியூ சென்சூரி புக் ஹவுஸ் (பி) லிட் சிட்கோஇ சென்னை — 98

4. எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும் -சாமி சிதம்பரனார் அறிவுப் பதிப்பகம்இ ராயப்பேட்டைஇ சென்னை- 14

5. தமிழ்ச் செவ்வியல் நூல்கள் மரபும் திறனும் — ஆ.மணி - லாவண்யா பதிப்பகம்இ திருவல்லிக்கேணிஇ சென்னை-05

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2024, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்-அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com